2005 ஏப்ரல் 4]

அலுவலர் நிலை–I-க்கும் உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பின்படி கோவை, பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலும், ஈச்சனாரி வினாயகர் திருக்கோயிலும் செயல் அலுவலர் நிலை–I-லிருந்து, உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்தப்படவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஆனால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, தனிக் கேள்வி போடுங்கள். வினா எண் 289, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

289—

முதியோர் இல்லம்

***32055—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் கட்டி முதியோர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இராஜபாளையம் தொகுதியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் கட்டி முதியோர்களைப் பராமரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது தொகுதியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் கட்டி முதியோர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லையென்று பதில் அளித்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எனது இராஜபாளையம் தொகுதி மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் பல பேர்கள் வசதிமிக்க அரசுப் பணிகளில் வேலை பார்ப்பவர்கள்கூட தன்னுடைய வயது முதிர்ந்த

பெற்றோர்களைச் சரிவர கவனிக்க முடியாமல் இருக்கின்றார்கள். பல முதியோர்களை யாரும் கவனிக்க முடியாத பட்சத்தில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியுடன் மீண்டும் முதியோர் இல்லம் கொண்டுவருவதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லங்கள் நடத்திட தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதே மாநில அரசின் திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் எவையும் அரசால் தொடங்கப்பட்டு நடத்தப்படுவதில்லை. முதியோர் இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு அதற்கான பராமரிப்பு மானியம் மட்டுமே அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 40 முதியோரைக் கொண்டு முதியோர் இல்லம் நடத்தும் 15 தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு பயனாளிக்கு ரூ.500 வீதம் முதியோர் இல்லம் பராமரிப்பதற்காக அரசு மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் முதியோர் இல்லம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார். முதியோர் இல்லம் நடத்துவதற்கு தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால் அரசு பரிசீலித்து அதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் தனியார் தொண்டு நிறுவனங்கள் சரியாக இயங்கவில்லை என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் பலபேர் நன்கு அறிவார்கள். இன்றைக்கு முதியோர் இல்லங்கள் அதிகமாக தேவைப்படுகின்ற ஒரு காலக்கட்டத்திலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். இந்தத் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உத்தரவு தந்தாலும்கூட அவர்கள் அதிகமான அளவு பணம் அந்த முதியோர்களிடத்திலே வசூல் செய்து சரியான முறையிலே முதியோர்களைக் காப்பதில்லை. அதனாலே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும், கட்டணம் செலுத்தி முதியோர்களைச் சேர்க்கின்ற வசதியோடு, அரசாங்கமே முதியோர் இல்லம் கட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2005 ஏப்ரல் 4]

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொத்தாம்பொதுவாக இந்த முதியோர் இல்லங்கள் சரியாக நடைபெறவில்லை என்றும், பணம் வசூலிக்கின்றார்கள் என்றும் கூறினார். எந்தப் பகுதியிலே எந்த முதியோர் இல்லத்தில் இதுபோன்று பணம் வசூலிக்கின்றார்கள் என்பதனை நீங்கள் எழுதிக் கொடுப்பீர்களானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 290, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

290—

மருத்துவர் நியமனம்

***24907—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் சித்த வைத்தியப் பிரிவில் ஆண் மருத்துவர் மற்றும் பெண் மருத்துவர் ஆகிய இருவரை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவமனைகளில் உள்ள சித்த வைத்தியப் பிரிவுகளில் பணிபுரிய ஆண் மருத்துவர், பெண் மருத்துவர் என இருவரை நியமனம் செய்ய தற்பொழுது கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழருடைய பரம்பரை வைத்தியமாகிய சித்த வைத்தியப் பிரிவு, தற்போது மிகச் சிறப்பான முறையிலே பொதுமக்களிடத்திலே வரவேற்பு பெற்றிருக்கிறது. ஆகையாலே, மிக அதிக அளவிலே சித்த வைத்தியப் பிரிவுக்குப் பொதுமக்கள் சென்று சிகிச்சை பெறுகிறார்கள். அதுவும் குறிப்பாக, பெண் நோயாளிகளும், ஆண் நோயாளிகளும், மிக அதிகமாகச்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY